# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

## தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்துச் செல்லும் திறன் பெற்ற பயிற்சியாளர்கள் 10ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்புக்கு இணையான சான்றிதழ் பெறுவதற்கான நிலையான வழிகாட்டுதல்கள்

அரசாணை (நிலை) எண்.34, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (எஸ்.1) துறை, நாள். 30.03.2022-ல் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்துச் செல்லும் திறன் பெற்ற பயிற்சியாளர்கள் மேற்படிப்பினை தொடர 10ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்புக்கு இணையான சான்றிதழ் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இணையான சான்றிதழ்கள் பெறுவதற்கு நிலையான வழிகாட்டுதல்கள் கீழ்க்காணும் விவரப்படி வழங்கப்படுகின்றன.

1. **தேவையான கல்வித்தகுதிகள்**

**10ம் வகுப்புக்கு இணையான சான்றிதழ் பெற தேவையான கல்வி த்தகுதிகள்**

- 8 ஆம் வகுப்பு தேர்ச்சி
- National Trade Certificate ( 2 year trade) (அல்லது) National Trade Certificate (1 year trade) & National Apprenticeship Certificate ( 1 year)
- 10 ஆம் வகுப்பு தமிழ் மற்றும் ஆங்கில மொழி பாடத்தில் தேர்ச்சி

**12ம் வகுப்புக்கு இணையான சான்றிதழ் பெற தேவையான கல்வித் தகுதிகள்**

- 10 ஆம் வகுப்பு தேர்ச்சி
- National Trade Certificate ( 2 year trade) (அல்லது) National Trade Certificate (1 year trade) & National Apprenticeship Certificate ( 1 year)
- +1 மற்றும் +2 வகுப்பு தமிழ் மற்றும் ஆங்கில மொழி பாடத்தில் தேர்ச்சி

2. **தமிழ் மற்றும் ஆங்கில மொழி பாட தேர்வுக்கு விண்ணப்பிக்க தகுதியானவர்கள்**

- தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுபவர்கள்
- தொழிற்பயிற்சி நிலையத்தில் 2 வருட பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்றவர்கள்
- ஒரு வருட தொழிற்பயிற்சி மற்றும் ஒரு வருட தொழிற் பழகுநர் பயிற்சி முடித்து தேர்ச்சி பெற்றவர்கள்

3. **தமிழ் மற்றும் ஆங்கில மொழி பாட தேர்வுக்கு விண்ணப்பிக்கும் முறை**

தனிதேர்வராக கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் அரசு தேர்வு இயக்ககத்தால் வெளியிடப்படும் கால அட்டவணைப்படி தொழிற்பயிற்சி நிலையத்தில் பயில்வதற்கான Bonafied Certificate (அல்லது) தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றதற்கான Course completion Certificate/ Transfer Certificate மற்றும் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்றதற்கான National Trade Certificate / National Apprenticeship Certificate மற்றும் இதர ஆவணங்களுடன் கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களுக்கு நேரில் சென்று இணையதளம் மூலம் தங்களது விண்ணப்பத்தினை பதிவு செய்ய வேண்டும்.

4. **இணையான சான்றிதழ் பெற விண்ணப்பிக்கும் முறை**

10ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்பு தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழி பாடம் தேர்ச்சி பெற்றவர்கள், அரசு தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்பட்ட மதிப்பெண் பட்டியல் நகல் மற்றும் தொழிற்பயிற்சி நிலையத்தில் தேர்ச்சி பெற்ற சான்றிதழ் National Trade Certificate / National Apprenticeship Certificate நகலுடன் சேர்த்து இணைப்பில் உள்ள விண்ணப்பத்தில் பூர்த்தி செய்து விண்ணப்பதாரரின் மாவட்டத்தில் உள்ள கீழ்க்கண்ட அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்துக்கு நேரடியாகவோ அல்லது பதிவு தபால் மூலமாகவோ அனுப்ப வேண்டும்.

| வ. எண் | மாவட்டம் | அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் | வ. எண் | மாவட்டம் | அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | கிண்டி | 20 | கன்னியாகுமரி | நாகர்கோவில் |
| 2 | செங்கற்பட்டு | செங்கற்பட்டு | 21 | தென்காசி | தென்காசி |
| 3 | திருவள்ளூர் | அம்பத்தூர் | 22 | திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 4 | வேலூர் | வேலூர் | 23 | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 5 | இராணிப்பேட்டை | அரக்கோணம் | 24 | விருதுநகர் | விருதுநகர் |
| 6 | கோவை | கோவை | 25 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் |
| 7 | ஈரோடு | ஈரோடு | 26 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை |
| 8 | கரூர் | கரூர் | 27 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 9 | நீலகிரி | குன்னூர் | 28 | திருவாரூர் | நீடாமங்கலம் |
| 10 | திருப்பூர் | திருப்பூர் | 29 | திருச்சி | திருச்சி |
| 11 | திண்டுக்கல் | திண்டுக்கல் | 30 | கடலூர் | கடலூர் |
| 12 | மதுரை | மதுரை | 31 | பெரம்பலூர் | பெரம்பலூர் |
| 13 | இராமநாதபுரம் | பரமக்குடி | 32 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 14 | சிவகங்கை | சிவகங்கை | 33 | கள்ளக்குறிச்சி | உளுந்தூர்பேட்டை |
| 15 | தேனி | தேனி | 34 | விழுப்புரம் | திண்டிவனம் |
| 16 | தருமபுரி | தருமபுரி | 35 | அரியலூர் | அரியலூர் |
| 17 | கிருஷ்ணகிரி | ஓசூர் | 36 | மயிலாடுதுரை | நாகப்பட்டினம் |
| 18 | நாமக்கல் | நாமக்கல் | 37 | திருப்பத்தூர் | வாணியம்பாடி |
| 19 | சேலம் | சேலம் | 38 | காஞ்சிபுரம் | ஒரக்கடம் |

5. **இணையான சான்றிதழ் வழங்கும் முறை**

வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரகத்தில் பெறப்படும் விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு, தொழிற்பயிற்சி நிலையத்தில் தேர்ச்சி பெற்ற சான்றிதழின் (National Trade Certificate / National Apprenticeship Certificate) உண்மைத்தன்மையை உறுதிசெய்து, இணையான சான்றிதழ் வழங்க பரிந்துரையுடன் அரசு தேர்வுகள் இயக்ககத்திற்கு அனுப்பி வைக்கப்படும். வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை ஆணையரகத்திலிருந்து பெறப்படும் பரிந்துரை அடிப்படையில் மொழி பாடசான்றிதழ் உண்மைத்தன்மையை சரிபார்த்து பயிற்சியாளர் பெற்ற கல்வி தகுதிகேற்ப 10ம் வகுப்பிற்கு இணையான / 12ம் வகுப்பு vocational / arts பிரிவிற்கு இணையான சான்றிதழ் அரசுத் தேர்வாக இயக்ககத்தால் தயார் செய்யப்பட்டு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை மூலம் விண்ணப்பதாரருக்கு அனுப்பி வைக்கப்படும்.

**ஆணையர்.**

**விண்ணப்ப படிவம்**

**தொழிற் பயிற்சி நிலைய சான்றிதழ் பெற்றவர்கள் 10ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்புக்கு இணையான சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பம்**

| | |
|---|---|
| விண்ணப்பதாரரின் பெயர் | |
| தந்தை பெயர் | |
| தாயார் பெயர் | |
| பிறந்த தேதி | |
| 8ம் வகுப்பு சான்றிதழ் நகல் இணக்கப்பட்டுள்ளதா ? | ஆம்/ இல்லை /சான்றிதழ் எண் |
| 10ம் வகுப்பு சான்றிதழ் நகல் இணக்கப்பட்டுள்ளதா ? | ஆம்/ இல்லை /சான்றிதழ் எண் |
| 11ம் வகுப்பு சான்றிதழ் நகல் இணக்கப்பட்டுள்ளதா ? | ஆம்/ இல்லை /சான்றிதழ் எண் |
| 12ம் வகுப்பு சான்றிதழ் நகல் இணக்கப்பட்டுள்ளதா ? | ஆம்/ இல்லை /சான்றிதழ் எண் |
| NTC சான்றிதழ் நகல் இணக்கப்பட்டுள்ளதா? | ஆம்/ இல்லை /சான்றிதழ் எண் |
| NAC சான்றிதழ் நகல் இணக்கப்பட்டுள்ளதா? | ஆம்/ இல்லை /சான்றிதழ் எண் |
| ஆதார் அட்டை நகல் இணக்கப்பட்டுள்ளதா? | ஆம்/ இல்லை/ ஆதார் எண் |
| 8ம் வகுப்பு படித்த பள்ளியின் முகவரி | |
| 10ம் வகுப்பு படித்த பள்ளியின் முகவரி | |
| பயிற்சி பெற்ற தொழிற் பயிற்சி நிலையத்தின் பெயர் மற்றும் முகவரி | |
| தொழிற்பழகுநர் பயிற்சி பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | |
| வீட்டு முகவரி | |
| கைபேசி எண் | |

**இவ்விண்ணப்பத்துடன் இணைத்துள்ள அனைத்து சான்றிதழ்களும் உண்மையானவை என உறுதியளிக்கிறேன்.**

**தேதி:** **விண்ணப்பதாரர் கையொப்பம்**